2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-25

(எ) தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2019), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 13—2—2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்ன? நீங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) இல்லை அவர் பேசுகிறாரா? மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு எதன் அடிப்படையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது? எந்தச் சட்டத்தின் அடிப்படையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது குறித்து குறுந்தலைப்பு மற்றும் தொடக்கத்தில் குறிப்பிடப்படவில்லை. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்தியாவிலே Central Universities, State Universities and Deemed Universities என்று மூன்று வகையான பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு தரப்படுகின்றன. இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலே, மாநில அரசால் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டு, அவை ஒழுங்காக நடைபெறாத ஒரு சூழ்நிலையிலே, அவற்றில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்ற ஒரு காலகட்டத்திலே, 2003 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு, இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்கிற நோக்கத்தோடு, University Grants Commission (Establishment and Maintenance of Standards in Private Universities) Regulations, 2003 என்கின்ற ஒரு வரன்முறையைக் கொண்டுவந்தது. பிரிவு 3(1)-ன்கீழ்தான் State Act-ன்படி பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

அதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மூன்று மாதங்களுக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அந்த பல்கலைக்கழகங்கள் UGC-ன் வரன்முறைக்குக்கீழ் வரவில்லை என்று சொன்னால், 2003 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட UGC-ன் Regulationsபடி அமைக்கப்படவில்லை என்று சொன்னால், அவற்றை அங்கீகரிக்காது. இன்றைக்கு 334 பல்கலைக்கழகங்களைத் தனியார் பல்கலைக்கழகங்களாக UGC அங்கீகரித்திருக்கிறது. தமிழகத்திலே உள்ள தனியார் பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு UGC-ன் அங்கீகாரம் கிடைக்காதபோது, வெளிநாடுகளுக்குச் சென்றோ அல்லது மற்ற மாநிலங்களுக்குச் சென்றோ வேலைவாய்ப்பினைப் பெறுகின்ற வாய்ப்பினை அவர்கள் இழந்துவிடுகிறார்கள்.

2019 பிப்ரவரி 14] [திரு. எஸ். ரகுபதி]

இன்னும் சொல்லப்போனால், UGC-*க்கு அதிக அதிகாரங்களும் அதிலே இருக்கின்றன. ஏனென்று சொன்னால்,* The overall performance of the Private University *அதாவது, முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, அதாவது பிரிவு 3* (*7*)-*ல்,* "A private university shall provide all the relevant information relating to the first degree and post-graduate degree/diploma programme(s) including the curriculum structure, contents, teaching and learning process, examination and evaluation system and the eligibility criteria for admission of students, to the UGC on a proforma prescribed by the UGC prior to starting of these programmes" *என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது ஆண்டிலிருந்து அவற்றைக் கண்காணிப்பதற்கு அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது. இந்த* proforma *அவர்களுக்கு அனுப்பப்படவேண்டும். எனவே, இந்தச் சட்ட முன்வடிவில் நாங்கள் அதிக திருத்தங்கள் கோரவில்லை. குறுந்தலைப்பிலே நீங்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அதில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தால் இதுபோன்ற தனியார் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் தனியார் பல்கலைக்கழகங்களுக்கு எதிரிகள் அல்ல; எதிரானவர்கள் அல்ல. தனியார் பல்கலைக்கழகங்கள் மூலமாகப் படித்த மாணவர்களில் இன்று பலர் வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிகிறார்கள். ஆனால், அவர்கள் படிக்கின்ற படிப்பு அங்கீகாரம் உள்ள படிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த குறுந்தலைப்பிலே நீங்கள், அதாவது* University Grants Commission (Establishment and Maintenance of Standards in Private Universities) Regulations, 2003, 3(1)-*ன்கீழ் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுகிறது என்பதை இணைத்தால் தனியார் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். ஏனென்றால் இன்றைக்கு மக்கள்* website-*ல் பார்க்கிறார்கள். இந்த* Act-*ஐ எல்லோரும் பார்ப்பார்கள். இதற்கு* UGC *அங்கீகாரம் இருக்கிறதா? அந்தச் சட்டத்தின்படி கொண்டு வந்திருக்கிறார்களா என்றும், 2003* Regulations-*படி கொண்டு வந்திருக்கிறார்களா என்றும் பார்ப்பார்கள். ஒரு சிறிய திருத்தத்தை இந்தச் சட்டமுன்வடிவில் சேர்த்துக்கொண்டால் எந்தவிதமான தவறும் கிடையாது. எனவே, அந்தத் திருத்தத்தை நீங்கள் கொண்டு வந்தால், இங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும். எனவே, அந்த மாணவர்களின் நலனைக் கருதி, இந்த ஒரு* line-*ஐ நீங்கள் சேர்த்துக்கொண்டால் போதும். அதனால் அந்தத் தனியார்*

பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று நாங்கள் இந்த திருத்தத்தைச் சொல்கிறோம். எனவே, இதை சேர்த்துக்கொண்டு, திருத்தப்பட்ட முறையிலே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றினால், இந்த தனியார் பல்கலைக்கழகங்களில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு UGC-ன் கல்வி அங்கீகாரம், சட்டப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2-30

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியது முழுவதும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு சம்பந்தப்பட்டது. தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டம், 2019-ஐ, இன்றைக்கு பல்கலைக்கழக மானியக் குழு தனியார் பல்கலைக்கழகங்கள் (நிறுவுதல் மற்றும் தரம் பராமரித்தல் ஒழுங்குமுறை நெறிகள்) 2003-ன்படி, மாநிலத்தின் தனியான சட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு சட்டம், 1956 சார்ந்த கூறுகள் மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட அச்சட்டத் திருத்தங்களின்படி தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டும். தனியார் பல்கலைக்கழகம் என்பது ஒருங்கிணைந்த பல்கலைக்கழகம் ஆகும். மாநில அரசின் சட்டத்தால் நிறுவப்படும் தனியார் பல்கலைக்கழகம் சாதாரணமாக மாநிலத்தின் எல்லைக்குள் செயல்பட வேண்டுமென்பதையும் கோடிட்டுக் காட்டி, இன்றைக்கு தனியார் பல்கலைக்கழகம் என்பது ஒரு புதிய பசுமை, பன்முக புலங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்துடன் எந்த ஒரு கல்லூரியையோ அல்லது கல்வி நிறுவனத்தையோ இணைவு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படாது. இப்பல்கலைக்கழகத்துடன் தற்போது செயல்பட்டு வரும் கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்க்கக் கூடாது. மேலும், பல்கலைக்கழகத்தினை நிறுவுவதற்கு அறக்கட்டளைகள், சங்கங்கள் இலாப நோக்கம் இல்லாத கம்பெனிகள் 100 ஏக்கருக்கு குறையாத ஒருங்கிணைந்த நிலங்களைக் கொண்டிருக்க வேண்டும். 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலையான அறக்கட்டளை நிதியை ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

அதோடுமட்டுமல்லாமல், இது விதி 3 மற்றும் விதி 9-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். அதேபோல் UGC-பல்கலைக்கழக மானியக் குழு விதி எண் 6-ன்கீழ் ஆசிரியர்கள், மாணவர்கள் சேர்க்கைக்குண்டான தகுதிகளும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதேபோல், விதி எண் 7 நிபுணர் குழு அமைப்பது குறித்தது. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதன் விண்ணப்பத்துடன் அதன் நோக்கம், தொலைநோக்குப் பார்வை மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவான திட்ட அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பம், உயர்நிலை நிபுணர் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, அக்குழுவால் பரிந்துரைகள் வழங்கப்படும். இப்பரிந்துரைகளை அரசானது ஆய்வு செய்து, பின்னர், அவ்விண்ணப்பத்தினை ஏற்பது அல்லது நிராகரிப்பது குறித்து முடிவு செய்யும். அவ்வாறு ஏற்கப்படும்பட்சத்தில் தனியார் பல்கலைக்கழகம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் குறித்த கடிதம் கல்வி அறக்கட்டளைக்கு வழங்கப்படும். கல்வி அறக்கட்டளை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பின்னரே, பல்கலைக்கழகத்தினுடைய பெயரை, இச்சட்டத்தின்கீழ் உள்ள அட்டவணையில் சேர்ப்பதற்கு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டுகிறேன்.

அதேபோல விதி எண் 14, இட ஒதுக்கீடு குறித்தது. இட ஒதுக்கீடு என்பது மற்ற மாநிலங்களிலெல்லாம் பின்பற்றப்படாத நிலையில், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அறிவுரையின் அடிப்படையிலே, மாணவர்கள் சேர்க்கையில் 35 சதவிகித இட ஒதுக்கீட்டை பின்பற்றுகிறோம். தற்போது தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டினை, தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் கல்வி பயின்றுள்ள மாணவர்கள் அல்லது ஐந்து வருடங்கள் தமிழ்நாட்டை இருப்பிடமாகக் கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேபோல் விதி எண் 53 மற்றும் 54-ன்படி, இத்தகைய பல்கலைக்கழகங்களில் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றினை மேம்படுத்தி, உலகத் தரத்திலான உயர் கல்வியை வழங்குவதை கண்காணிப்பதற்கு ஒழுங்குமுறை அமைப்பினை ஏற்படுத்துவதற்கு

[திரு. கே.பி. அன்பழகன்] [2019 பிப்ரவரி 14

இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தனியார் பல்கலைக்கழகத்தின் கொள்கை முடிவான பொருள்களிலே அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தனியார் பல்கலைக்கழகங்கள் இச்சட்டத்தின்படி செயல்படவில்லை என புகார் பெறப்படின், அப்பல்கலைக்கழகத்திற்கு விளக்கம் அளிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டு, அதனுடைய விளக்கங்கள் ஏற்புடையதாக இல்லையெனில், ஒரு விசாரணை அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் தொடர்ந்து சட்டத்தின்கூறுகளைப் பின்பற்றவில்லையெனில், அப்பல்கலைக்கழகத்தை நிருவகிப்பதற்கு ஒரு நிருவாகியை நியமனம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிருவாகியின் அறிக்கை பெறப்பட்ட பின், அரசு அதனை ஆய்வு செய்த பின், பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் பிற அமைப்புகளின் ஒப்புதலுடன் அப்பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தை இரத்து செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களுடைய கல்விக்கான அங்கீகாரம் பற்றி இங்கு கோடிட்டுக் காட்டினார். தனியார் பல்கலைக்கழகங்களின் படிப்பு, பாடத் திட்டம், ஆசிரியர்கள், உட்கட்டமைப்பு வசதிகள், நிதித் திறன் ஆகியவை பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் மற்றும் AICTE போன்ற சட்டப்பூர்வ அமைப்புகளின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன்மூலம் பெறப்படக்கூடிய பட்டங்கள் அனைத்தும் சட்டப்பூர்வமாக செல்லக்கூடியவை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பல்கலைக்கழகங்களாக பிற மாநிலங்களில் கிட்டத்தட்ட 24 மாநிலங்களிலே, 288 பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில், இன்றைக்கு உயர் கல்வித் துறையில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், இரண்டு

2019 பிப்ரவரி 14] [திரு. கே.பி. அன்பழகன்]

பல்கலைக்கழகங்களை ஏற்கெனவே ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும், இதுபோன்ற பல்கலைக்கழகங்கள் ராஜஸ்தானில் 46, குஜராத்தில் 31, உத்தரப் பிரதேசத்தில் 29, மத்தியப் பிரதேசத்தில் 24, ஹரியானாவில் 20 என்று ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது. தமிழகத்தில் உயர் கல்வி ஓர் உயர்ந்த நிலைக்கு இன்றைக்கு வந்திருக்கிறது. ஆகவே, மிகப் பெரிய இந்த நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக, தமிழகத்தில் உயர் கல்வித் துறையை உயர்த்தி நிறுத்துகின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அரசானது இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 58 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 58 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை